சிந்தனை
வெள்ளிவிழாச் சிறப்பிதழ் - 1999

# யாழ்ப்பாணத்து மரபு வழிப் பெண் கல்வி

சபா. ஜெயராசா

எழுத்து வடிவிலமைந்த வரன்முறையான நேரடி ஆவணங்கள் கிடைக்கப் பெறாமையால் நாட்டாரியல், அறிகை மானிடவியல் (Cognitive Anthropology) சமூக மானிடவியல் முதலிய ஆய்வுப் புலங்களின் வழியாக யாழ்ப்பாணத்து மரபு வழிப் பெண்கல்வி பற்றி ஆராய வேண்டியுள்ளது. சமூகம் என்பது பல நிரலமைப்புக்களை உள்ளடக்கிய வடிவமாதலால், உயர்ந்தோர் வழக்குகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மரபுவழிப் பெண் கல்வி பற்றி அறிய முற்படுதல் முழுமையாகாது. தமிழர் பாரம்பரியத்தில் நிகழ்ந்த கூட்டுமொத்தமான கல்விச் செயற்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கு யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்வேறு தளங்களிலும் நிகழ்ந்த பெண் கல்விச் செயற்பாடுகளைத் தொகுத்து நோக்குதல் இன்றியமையாததாகும்.

ஒழுங்குபடுத்தப்பட்ட நவீன கல்வி நிறுவன வடிவங்களை ஒத்த காட்டுருக்கள் யாழ்ப்பாணத்து மரபுவழிப் பெண் கல்வியிலே காணப்படாவிடிலும் அறிகை சார்கல்வி, எழுச்சி சார்கல்வி, உடலியக்கம் சார்கல்வி முதலியவற்றைப் பெண்களுக்கு வழங்குவதற்கான வினைத்திறன் பொருந்திய செயலமைப்புத் தொகுதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமைக்குப் பரவலான சான்றுகள் உள்ளன.

பெண்களை வலுவின் குறியீடுகளாகக் கருதும் பொதுவான கருத்தியல் வழியாகவும், செயல்வழியாகவும் இருநிலைகளில் இணைப்பைக் கொண்டிருந்தது.1 எந்த ஒரு சமூகக் கட்டுமானமும் தனக்குரிய அறிவுக் கையளிப்பு, அனுபவக் கையளிப்பு, உணர்ச்சிக் கையளிப்பு முதலியவற்றைத் தொடர்ந்து வரும் தலைமுறையினருக்கு வழங்குவதற்குரிய முறைசார்கல்வி முறைமையையும் முறைசாராக் கல்வி முறைமையையும் இயக்கிய வண்ணமிருக்கும். கல்விச் செயல்முறையானது பெண்கள் உள்ளிட்ட அனைத்து வயதுத் தொகுதியினருக்குமுரிய உடல், உள ஆற்றல்களைச் சமூக இயல்புக்கு எற்றவாறு முன்னெடுப்பதில் முனைந்து செயல்கொள்வது சமூக இருப்புக்கு அவசியமானதாகும். எந்த ஒரு பண்பாட்டினதும் மரபு வழிக்கல்வியை ஆராயும் பொழுது சில அடிப்படையான எண்ணக்கரு விளக்கங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதன் தொடர்பில் "எழுத்தறிவு" (Literacy) என்ற எண்ணக்கரு

முதற்கண் முக்கியத்துவம் பெறுகின்றது. எழுத்தறிவு என்பது கல்விச் செயல் முறையின் ஒரு பிரதான பரிமாணம். ஆனால் எழுத்தறிவு இன்றியும் ஒருவர் கல்விச் செயல் முறையில் ஈடுபட முடியும் என்பதை முதற்கண் மனங்கொள்ள வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்து மரபுவழிப் பெண்கல்வி பற்றி ஆராயும் பொழுது இந்த எண்ணக்கரு விளக்கம் முக்கியமானதாகும். "செவிவழியாக மனப்பாடம் செய்தலும் ஒப்புவித்தலும், பிரயோகித்தலும்" என்ற கல்விச் செயல் முறையானது எழுத்துத்திறன் சம்பந்தப்படாது யாழ்ப்பாணத்துப் பெண்களிடையே நிலவி வந்துள்ளது. யாழ்ப்பாணத்து மரபில் 'மனக் கணிதம்", "மனப்பாடம்", "நினைவோலை", "வாய்ப்பாடம்", "வாயெழுத்து" "வாய் முறைப்பாடு", "ஞாபகப்பெட்டகம்" முதலிய பல தொடர்கள் எழுத்தறிவு சாரா மொழி வாயிலாக நிகழும் கற்றற் செயல் முறையினைப் புலப்படுத்துகின்றன. உலகில் வழங்கும் மொழிகள் சில இன்று கூட வரிவடிவம் அற்ற மொழிகளாக இருத்தல் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது.

பாரம்பரியமான யாழ்ப்பாணச் சமூக அமைப்பிற் காணப்பெற்ற பொருண்மிய முரண்பாடுகள் பெண்களின் நிலையில் ஏற்படுத்திய செல்வாக்குகளின் விளைவாக அவர்களின் சமூகப் பரிமாணத்தில் இருமைத் தன்மைகள் காணப்பெற்றன. ஆய்வாளர்கள் இந்த இருமைத் தன்மைகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.[2] யாழ்ப்பாணத்துப் பெண்களின் சமூகப் பரிமாணம் ஒரு புறம் வலுவும், ஆற்றலும் பொருந்தியதாகக் காணப்பட்டது. மறுபுறம் நலிவுக்கும் அடக்குமுறைமைக்கும் உட்பட்டதாக இருந்தது.

பெண் கல்வி தொடர்பாக கருத்தியல் முரண்பாடுகள் அராலியூர் இராமலிங்க முனிவரின் பாடல்களிலே (1649) தெளிவாகக் காணப்படுகின்றது.

> "பேதையர் தம்மைப் பெற்றனமென்று
> பேது றன் மிகப் பெரும்பிழையே"

என்று இராமலிங்க முனிவர் சுட்டிக் காட்டினார்.[3]

பெண்களை ஏககாலத்தில் புகழ்ந்து ரைத்தலும், இகழ்ந்துரைத்தலும், அறிவுக்கு எடுத்துக் காட்டாகச் சொல்லுதலும், அறியாமைக்கு எடுத்துக் காட்டாகச் சொல்லுதலும், எல்லாம் தெரிந்தவர்கள் என்று கூறுதலும், எதுவும் தெரியாதவர்கள் என்று கூறுதலும் முரண்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றன. யாழ்ப்பாணத்துத் தேச வழமைச் சட்டத்தை (S.J. Thambiah, 1973) ஆராய்ந்து பார்க்கும் பொழுது பெண்களின் சொத்துரிமை தொடர்பான முரண்பட்ட பண்புகளைக் காணலாம். ஒருபுறம் பெண் களின் சொத்துக்குப் பாதுகாப்புத் தருகின்ற பண்புகள் காணப்பட்டாலும், மறுபுறம் பெண்களின் சொத்துக்களுக்குரிய பாதுகாப்பு; உறுதி போதாமையும் காணப்படுகின்றன.

மரபுவழி யாழ்ப்பாணச் சமூகத்தில் ஆண், பெண் உற்பத்தி முறைமை வேறுபாடு களை பின்வருமாறு சுட்டிக்காட்டலாம்.

1. பெண்கள் இல்லம் சார் (Domestic) உற்பத்தியில் ஈடுபட, ஆண்கள் இல்லம் கடந்த உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

2. பொருள் உற்பத்தியும், இனப்பெருக்க மும் தொடர்பான மீநிலைக்கட்டுப்பாடு ஆண்கள் வசமிருந்தது. பொருள் உற்பத்தியிலும், இனப் பெருக்கத்திலும் பெண்களின் பங்குபற்றல் தவிர்க்க முடியாதிருந்தது.

3. பொருண்மிய உற்பத்திச் சடங்குகளில் ஆண்களுக்கு முன்னுரிமை தரப்பட்டது. வளமியச் (Fertility) சடங்குகளில் பெண் களுக்கு முன்னுரிமை தரப்பட்டது.

4. அறிவு சார் தீர்மானங்கள் ஆண்களிடத் தும், உணர்ச்சி சார் தீர்மானங்கள் பெண்களிடத்தும் விடப்பட்டன.

5. திருமணத் தொடர்பாடற் கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது, செய்தியை அனுப்புதல், பெறுதல் முதலிய செயற்பாடுகளில் ஆண்கள் முக்கியத்துவம் பெற்றனர். பெண்கள் திருமண நிச்சயிப்பின் செய்திப் பொருளாக (Message) அமைந்தனர்.

6. ஆண்களின் உழைப்பு மதிப்பீடு செய்யப்பட்டதாயும், பெண்களின் உழைப்பு மதிப்பீடு செய்யப்படாதாயும் அமைந்தது.

7. குழந்தைகளின் வளர்ப்பும், அவர்களுக் கான கல்விக் கையளிப்பும் பெருமளவில் பெண்களுக்குரியவையாக நிபந்தனைப் படுத்தப்பட்டிருந்தன.

8. சாதிய முறைமைக்கேற்ப பெண்களின் கல்விச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தன.

மேற்கூறிய இயல்புகளுக்கும் கல்வி முறைமைக்குமிடையே பல்வேறு தொடர்பு களையும் இணைப்புக்களையும் காண முடியும். பெண்களுக்கான கல்வியின் முக்கியத்துவத்தை சமுகம் பல்வேறு கோணங்களிலே வற்புறுத் தியது. கல்வி 'வாக்கு' என்றும் குறிப்பிடப் பட்டது. சிறப்பு மிக்க கல்வி, "செல்வாக்கு" என்றும் குறிப்பிடப்பட்டது. உடல் அலங்காரத் திலும் மேம்பாடானதாகக் கல்வியைக் குறிப்பிடும் "கல்வி அழகே அழகு" என்ற தொடர் வழக்கிலிருந்தது. "கமச்சி, இடைச்சி, உடைச்சி, வலைச்சி......." என்ற எல்லாப் பெண்களையும் "வாக்கு நகை போட்டு வடம் பிடிக்க வாருங்கடி" என்ற தொடர் வேறொரு பரிமாணத்தில் கல்வியின் முக்கியத்துவத்தை விளக்கியது. இங்கு "வாக்கு நகை" என்பது கற்றலினால் நிகழும் சிறப்பைக் குறித்து நின்றது.[4]

யாழ்ப்பாணத்துக்கு ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து நிகழ்ந்த பண்பாட்டுச் செல்வாக்குகள் பாரம்பரியமான கல்வி ஒழுங்கமைப்பில் சமநிலைத் தளம்பல் களை ஏற்படுத்திய வேளை பெண்களுக்கு மேலைப்புல வடிவில் அமைந்த கல்வி வேண்டும் என்பதும் வேண்டத்தகாது என்பது மான முரண்பாடுகள் சமுகத்தில் ஏககாலத் திலே நிலவின. இந்நிலையில், பெண்கல்வியின் சிறப்பை நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தும் வழக்கம் மேலோங்கியது. சில எடுத்துக் காட்டுகள் வருமாறு.

1. "கல்லாள் - கல்லாள்" அதாவது படிக்காதவள் கல் போன்றவள் எனப்பட்டது.

2. "படியாள் - படியாள்" படிக்காதவள் கற்படி போன்று மிதிக்கப்படுபவள் என்று விளக்கப்பட்டது.

இந்துப் பாரம்பரியத்தில் பெண்களின் அந்தஸ்து அவர்களுக்குரிய பொருளாதார வலு, அவர்கள் வாழும் இல்லங்களுக்குரிய கூரிடர்கள் (Constraints) சுயமாகத் தீர்மானங் கள் எடுப்பதற்குரிய அதிகாரம், குடும்ப அந்தஸ்து முதலியவற்றால் தீர்மானிக்கப் படுதலை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளா னர்.[5] ஆனால் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் இவற்றுடன் பெண்களுக்குரிய அறிவு திறன், மனப்பாங்கு என்பவை அவர்களின் அந்தஸ்தைத் தீர்மானிப்பதில் சிறப்பார்ந்த பண்புகளாக அமைந்தன.

புலக்காட்சி கொள்ளல், அறிதல், சிந்தித்தல், உணர்தல், பெறுமானங்கொள்ளல் முதலிய செய்றபாடுகள் மரபுவழிக் கல்வியில் முன்னெடுக்கப்பட்டன. நடப்பியலை அறிவொழுங்குபடுத்தல் (Codification of Reality) என்ற செயற்பாடு பண்பாட்டுக் கோலங்களால் நெறிப்படுத்தப்படுகின்றது. தமிழரின் பண்பாட்டில் "பொட்டு" என்பது அறிதலின் குறியீடாக அமைந்தது. சிறு குழந்தைகள் தமது புலன்கள் வழியாகச் சூழலை உள்வாங்கும் புலன்சார்காட்சிகளை (Sense Perception) உருவாக்கும் செயற்பாடுகள் குறியீடுகளினாற் சுட்டிக்காட்டப்பட்டன. பொட்டு அறிதலின் குறியீடாயிற்று. குழந்தை

களுக்குப் பெரிய கருமைநிறப் பொட்டிடலால் அறியும் திறன் குறிப்பிடப்படும். திருமணத்தின் பின்னர் சிவப்பு நிறப்பொட்டிடுவர். வாழ்க்கை நிலையில் ஏற்படும் மாற்றம், அதாவது இருப்புநிலையில் (Existence) ஏற்படும் மாற்றம் உணர்வு நிலையில் (Consciousness) மாற்றங் களை ஏற்படுத்தும் என்பது அறியப்பட்டது.

"பொட்டு" என்பதற்குத் "துவாரம்" என்ற கருத்தும் உண்டு. யாழ்ப்பாணத்து வேலிகளில் பொட்டு வைத்தல் என்பது துவாரம் வைத்தல் என்ற பொருளாகும். வடமாராட்சிப் பகுதிகளில் வேலிப்பொட்டு "கண்டாயம்" எனப்படும். "கண்டாயம்", "பொட்டு" முதலிய எண்ணக்கருக்கள் நுழை வாயிலைக் குறிப்பிடும். பொட்டு வைத்தல் என்பது அறிவுக்குரிய நுழைவாயிலைக் கண்டு கொள்ளலை அங்கீகரிப்பதாக அமைகின்றது.

புலக்காட்சி கொள்ளலிலும் அறிவு பெறலிலும் களத்தில் தங்கியுள்ளோர் களத்தில் தங்கிராத களவிடுதலையினர் (Field Independent) என்ற இரு பிரிவினர் உள்ளனர். தனியாள் திறன்களை வளர்த்தல், தன்னம்பிக் கையை வளர்த்தல், தனியாள் ஆற்றல்களுக்கு மதிப்பளித்தல், ஒவ்வொருவருக்குமுரிய படைப் பாற்றலை வளர்த்தல், தனித்தன்மை களுக்கு உற்சாகமளித்தல், உசாவல் விருப்புக்கு (Curiosity) ஊக்கமளித்தல் முதலியவை யாழ்ப்பாணத்துப் பாரம்பரியமான கல்வியின் வழியாக வளர்த்து எடுக்கப்பட்டன. களத்தில் தங்கியிராதோராக ஆண்களையும் பெண் களையும் வளர்த்தெடுத்தல் கல்வியின் நோக்கமாயிற்று. ஆனால் மேலைத்தேய பொருளாதார முறைமையும், கல்வி முறைமை யும் களத்தில் தங்கியிருக்கும் செயற்பாடுகளை வளர்க்கலாயின. இந்தக் கருத்து மேலும் ஆழ்ந்த ஆய்வுக்குரியது.

யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய பொருளாதார நடவடிக்கைகள் மந்தை மேய்த்தல், செறிவுமிக்க சிறு நில விவசாயம், மீன்பிடித்தல் என்ற முப்பெருந்துறைகளை உள்ளடக்கியனவாகக் காணப்பட்டன. பொருளாதார நடவடிக்கைகளோடு இணைந்த தாகவும், வலுவூட்டுவதாகவும் கல்விச் செயல் முறைகள் தொழிற்பட்டன. கிராமியப் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் தனியார் முயற்சியை வலுவூட்டாது, குடும்பம் என்ற அலகை முதன்மைப்படுத்தின. கல்விச் செயல் முறையும் குடும்பம் என்ற அலகினை மீளவலியுறுத்தும் வகையில் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது. ஆயின் இங்கு அறிமுகமான மேலைத்தேய கல்வி முறைமை குடும்ப உறுப்பினர்களை தொழில் அடிப்படையிலும், இடநிலைய அடிப்படையிலும் அந்நிய மாக்கியது.

மரபுவழி யாழ்ப்பாணத்துப் பெண் கல்வி முறையில் கல்வியின் தொழிற்பாடுகள் பின்வரும் துறைகளை முதன்மைப்படுத்து வனவாய் அமைந்தன.

1. சொல்சார் அறிவு, சொல்சாரா அறிவு முதலியவற்றைக் கல்விச் செயல் முறையின் வழியாக வளர்த்தல்.
2. உடலியக்கத் திறன்களை வளர்த்தல்.
3. மனவெழுச்சிகளுக்குப் பயிற்சி தருதல்.
4. சமூக இசைவாக்கத் திறன்களை வளர்த்தல்.
5. விளங்காதவற்றை விளங்க வைத்தல்.
6. மனப்பதகளிப்பைத் தணித்து கட்டுப்பாடுகளை வளர்த்தல்.
7. சமூக ஒழுங்கமைப்பைக் கல்விச் செயல் முறையின் வழியாகப் பாதுகாத்தல்.
8. பெண்களினால் ஏற்கப்படும் பல்வேறு நடிபங்குகளையும் (Role) திறம்படச் செய்வதற்குரிய ஆற்றல்களைப் பயிற்றுவித்தல்.
9. பெண் என்றவகையில் மேற் கொள்ளப்படும் சடங்குகளைத் திறம்படச் செய்வதற்குரிய பயிற்சிகளைத் தருதல்.
10. பெண்களுக்குரிய கலையாற்றல் திறன் களையும், கைவினைத்திறன்களையும் வளர்த்தல்.

நாட்டார் வழக்கியல்களில் இருந்து மரபுவழி யாழ்ப்பாணப் பெண்களின் கல்விச் செயற்பாடுகளின் இயல்புகளை உதிரிகளாக அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. சில எடுத்துக்காட்டுகள் வருமாறு.

(அ) கார்க் கர்ச்சி கருங்கண்ணி
கட்டிச் சோடி கட்டித் தாறன்
படிக்க வேணு மெண்டால்
பறந்துகாட்டு.

(ஆ) பெண் மூலம் நிர்மூலம்
பெருவழி ஞான மெண்டால்
பெண் மூலம் அரசாளும்.

(இ) அவிட்டத்தில் பெண் படித்தால்
தவிட்டுப் பானையும் பொன்னாகும்.

(ஈ) கொத்தியாத்தை, கொத்தியாத்தை
பெண்ணைக் காத்திடு கொத்தியாத்தை
படிக்க வைச்சிடு கொத்தியாத்தை

(உ) கன்றுப் பனையோலை - அக்காளுக்கு
கணக்கெழுத நல்லோலை

பெண்கள் படிக்கத் தொடங்கும் பொழுது பின்வரும் அடிகளைப் பாடும் மரபும் காணப்பட்டது.[8]

விக்கினங்கள் தீர்க்கும்
விநாயகனே முன்நடவாய்
கந்தனுக்கு முன்பிறந்த
கணபதியே முன்நடவாய் -
வல்ல கணபதியே
வாக்குத் தொடுத்து வைப்பாய் -

பாரம்பரியமான யாழ்ப்பாணத்துக் கல்வி முறைமையில் குழந்தை நிலையிலிருந்தே பெண்கல்வி ஆரம்பமாவதைப் பின்வரும் கிராமியப் பாடல்களின் அடிகள் புலப்படுத்துகின்றன.[9]

(அ) "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக்குயிலே சாய்ந்தாடு
குத்துவிளக்கே சாய்ந்தாடு
கோவில் புறாவே சாய்ந்தாடு
குயிலே மயிலே சாய்ந்தாடு"

(ஆ) "கைவீசம்மா கை வீசு
கடைக்குப் போகலாம் கைவீசு"

(இ) நாய்க்குப் படிப்பில்லை
நரிக்குப் படிப்பில்லை
நான் பெத்த பெண்ணுக்குப்
படிப்பு வா படிப்பு வா ......."

(ஈ) தோள் வீசம்மா தோள் வீசு
சுந்தரக்கிளியே தோள் வீசு
வானே பூவே தோள் வீசு
வாக்குப் பொலியத் தோள் வீசு"

## இசைக்கல்வி

"பெண்ணுக்குப்பாட்டு" என்ற தொடர் யாழ்ப்பாணத்தில் வழக்கிலிருந்தது. பெண்கள் பாடலில் வல்லவர்களாக வரவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. தாலாட்டிலிருந்து - ஒப்பாரி வரை மனிதவளர்ச்சி மட்டங்களில் வரும் பாடல்களில் பெண்களே கூடுதலாகப் பங்குபற்றினர். இப்பாடல்களை ஆண்கள் பாடினார்கள் என்பதற்குச் சான்றுகள் இல்லை. இராகங்களைப் பெண்களுக்குப் பெயர்களாக வைக்கும் மரபும் காணப்பட்டது. பழந்தமிழ் இசையைக் குறிக்கும் 'பண்' என்பதும் பெண்களுடன் இணைத்து வழங்கப் பெற்றது. பண்ணிச்சி, பண்ணாகத்தி, யாழி, துத்தி, இளிச்சி, விளரி, தாரம் முதலாம் பெயர்கள் பெண்களுக்கு வழங்கப் பெற்றிருந்தன.

துத்தம் என்பது இரண்டாம் சுரமாகிய ரிஷபத்தைக் குறிக்கும். துத்தத்தோடு பெண்பால் விகுதியாகிய "இ" சேர்க்கப்படும் பொழுது துத்தியாயிற்று. "இளி" என்பது ஐந்தாம்சுரமாகிய பஞ்சமத்தைக் குறித்தது. "இளி" என்பது இளிச்சியாயிற்று. "விளரி" என்பது ஆறாம் சுரமாகிய தைவதத்தைக் குறித்தது. "தாரம்" என்பது ஏழாம் சுரமாகிய நிஷாதத்தைக் குறித்தது.

ஏழிசை மரபு பின்வருமாறு அமையும்.[10]

குரல் - ச
துத்தம் - ரி
கைக்கிளை - க

| | | |
|---|---|---|
| உழை | - | ம |
| இளி | - | ப |
| விளரி | - | த |
| தாரம் | - | நி |

பெண்களுக்கும் இசைக்கல்விக்குமுள்ள தொடர்பு "பாலை பாடும் வாலைக்குமரி" என்ற தொடரினால் மேலும் புலன்படுத்தப் படும். தமிழிசையில் "பாலை" என்பது வகுப்பு அல்லது வகையைக் குறிக்கும். பாலையானது ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப் பாலை, சதுரப்பாலை என நான்கு வகைப்படும்.

யாழ் என்ற இசைக்கல்வியில் தேர்ந் தோர் "யாழி" எனவும், அழைக்கப்பட்டனர். பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ், நாரதயாழ், தும்புருயாழ், கீசகயாழ் என்று யாழ் வகைகள் பாகுபடுத்தப் பட்டாலும் மருத்துவயாழ், தும்புருயாழ், செங்கோட்டியாழ் முதலியவற்றையே பெண்கள் பயன்படுத்தினார்கள் என்று கூறப்படுகின்றது. மருத்துவயாழ் ஒரு தந்தியை உடையது. முப்புருயாழ் ஒன்பது தந்திகளைக் கொண்டது. செங்கோட்டியாழில் இசைமீட்டும் நரம்புகள் நான்கும், தாளம் மீட்டும் நரம்புகள் மூன்றும் காணப்பட்டது. யாழுக்கு 'கலம்' என்ற சொல்லும் இணையாக பயன்படுத்தப் பட்டது. நாளாந்தப் பயன்பாட்டிலுள்ள கலங் கள் யாழின் குடமாகப் பயன்படுத்தப்பட்ட மையால் இந்தப் பெயர் இடம் பெற்றிருக்கலாம்.

பெண்ணைக் "குயிலுவம்" என்று அழைக்கும் மரபும் யாழ்ப்பாணத்தில் நிலவியது. மிடற்றிசைக்குத் துணையாக அமையும் இசைக்கருவிகளை அதாவது பக்கவாத்தியங்களை குயிலுவக்கருவிகள் என இசை ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.[11] பெண்ணை ஆண்களுக்குப் "பக்கவாத்தியம்" என்று கூறும் பேச்சு வழக்கு இன்றும் உண்டு.

## ஆடற்கல்வி

உரையாடும்பொழுது கவிதை வடிவில் உரையாடுதலும், தொழில் புரியும்போது உடலசைவுகளை அழகியல் அசைவுகளாக மாற்றிச் செயற்படுதலும் பெண்களிடத்துக் காணப் பெற்ற சிறப்புப் பண்புகளாக அமைந்தன. குழந்தைகளைத் தாலாட்டும் பொழுது மேற்கூறிய இரு பண்புகளும் இணைந்திருந்தன.

யாழ்ப்பாணத்துக்கூத்துப் பாரம்பரியத் தில் ஆண்கள் ஆடிய கூத்து "மல்லுக்கூத்து" எனவும், பெண்கள் ஆடிய கூத்து "பண்டக் கூத்து" எனவும் அழைக்கப்பட்டது. மல்லுக் கூத்து வன்மையான அல்லது கடினமான தசைநார் அசைவுகளைக் கொண்டதாகவும், பண்டக்கூத்து இங்கிதமான அல்லது இலகு நிலை அசைவுகளைக் கொண்டதாகவும் அமைந்தது. பண்டக்கூத்தின் இன்னொரு பரிமாணம் பண்டங்களைக் கைகளில் அல்லது தலையில் ஏந்தியவாறு ஆடுதலாகும். பாற்செம்பு, கடகம், கூடை, வைக்கோல், தானியக்கதிர், சுரைக்காய் முதலியவற்றைத் தலையில் ஏந்தியவாறு ஆடும் வழக்கம் இருந்தது. நெற்கதிர், குடம், சுளகு முதலிய வற்றைக் கைகளில் ஏந்தியவாறு ஆடும் வழக்கமும் நிலவியது.12

இன்றைய யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் காவடியாட்டத் தொகுப்பில் "மல்லுக் கூத்து", "பண்டக்கூத்து" ஆகியவற்றின் எச்ச வடிவங்களைக் காணலாம். ஆண்கள் காவடி யெடுத்து கடினமானதும், அதிக விரைவுள்ள தும், தசைநார் அசைவுகளை அதிரவைப்பது மான ஆடல் வடிவங்களை மேற்கொள்வர். காவடி ஆடுபவரது தாய் அல்லது மனைவி அல்லது சகோதரி தலையிற் பாற்செம்பை ஏந்நியவாறு மெதுவான காற்கோலங்களை (Foot Work) ஏற்படுத்தி நெகிழ்ச்சியான அசைவுகளை ஏற்படுத்தும் வழக்கம் இன்றும் உண்டு.

பண்டக்கூத்தோடு இணைந்த ஆடல் வடிவங்களாக இடித்தல், புடைத்தல், அளத்தல், தூற்றுதல், கழுவுதல், நிறைத்தல், அவித்தல் என்றவாறான நாட்டியச்சுட்டிகள்

வளர்ச்சியடைந்தன. கைகளின் வாயிலாகக் கருத்தை வெளிப்படுத்தும் முறைமை "கைக்குறி" எனவும், முகவடிவங்களினால் கருத்தை வெளிப்படுத்தல் "முகக்குறி" எனவும் குறிப்பிடப்பட்டது.

நான்கு வகையான ஆடல் ஆற்றுகைகள் பெண்களிடத்துக் காணப்பட்டன. அவையாவன:-

1. உறுப்பாடல் - உறுப்புக்கள் சார்ந்தது
2. சொல்லாடல் - மொழிநிலைப் பிரயோகம்
3. அணியாடல் - பொருத்தமான ஆடை அணிகலன்களைப் பயன்படுத்துதல்
4. மெய்ப்பாடு - ஆடலையும் மனவெழுச்சிகளையும் இணைத்தல்.

ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து நிகழ்ந்த சமூக ஒழுங்கமைப்புக்குலைவும் (Social Disorganisation) உள்நாட்டுப் போர்களும் பெண்களை வீட்டுக்குள் முடக்கி வைக்க வேண்டிய தேவையை வலியுறுத்தியமை பெண்களுக்குரிய நாட்டியக் கல்வியை நேரடியாகப் பாதித்தது.

## அழகுக்கலைமரபு

வீட்டுமுற்றத்திலே மாக்கோலமிடல், மண்சுவர்களிலே சுண்ணத்தினாற் கோலம் வரைதல், பனை ஓலைகளினால் வண்ணப் பெட்டி, வண்ணப்பாய் இழைத்தல், கிலுகிலுப்பையும் கிளியும் செய்தல், களித்தன்மை கொண்ட குளத்து மண்ணிலே பொம்மைகள் செய்தல் என்றவாறான கலையாக்க மரபு பெண்களிடத்து நிலவியது. பூக்களில் இருந்து என்பதுக்கு மேற்பட்ட மாலை வகைகளை ஆக்கும் திறன் பெண்களிடம் காணப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.[13]

"மாம்பூவோ
மாதுளம் பூவோ
தேன் பூவோ வேணும்?"

என்று ஒரு பெண் கேட்பதும்,

"மாம்பூவும் வேண்டாம்
தேன்பூவும் வேண்டாம்
மாதுளம் பூவே வேணும்"

என்று இன்னொரு பெண் சொல்வதுமான விளையாட்டுக்கள் காணப்பட்டன. பூக்களை அடுக்கி, பூக்களால் கோலமிட்டு விளையாடும் பொழுது பெண்கள் இவ்வாறு கேட்பதும் விடை சொல்வதுமான கருத்தாடல் நிகழும். இங்கு "உட்பொருள் கண்டு கொள்ளல்" என்பது சிறப்பிடம் பெறும். "மாதுளம்பூ" என்பது பெண்ணாகிய உனது மனமாகிய மலர் தான் வேண்டும் என்ற உட்பொருளைக் கொண்டது.

மணிகளால் அணிவண்ணங்கள் செய்யும் கைவினையும் கிராமப் புறங்களிலே கற்பிக்கப்பட்டது. மணிகளால் சப்பரம் கட்டுதல், மணவறை அமைத்தல், திருவாசிகள் செய்தல், திருத்தொங்கல் கட்டுதல் முதலிய கலையாக்கங்கள் இன்றும் வீர சைவப் பெண்களிடம் காணப்படும் கல்விச் செயல் முறையாகவுள்ளது.

"பச்சைகுத்துதல்" என்ற ஒருவித அழகுக்கலைச் செயற்பாடும் நிலவி வந்தது. பச்சைநிறம் பொருந்திய சாயத்தில் ஊசியைத் தோய்த்தெடுத்து மனிதரின் தோலிலே குற்றி அழியாத வடிவங்களைப் பொறித்து வைத்தல் "பச்சை குத்தல் (Tatoo) எனப்படும். பச்சை குத்துவதனால் நோய்கள் வராதென்றும் நீண்ட ஆயுள் கிடைக்கும் என்றும் நம்பிக்கை நிலவியது. சீனாவிலே காணப்படும் "அக்குபங்ஸர்" முறைக்கும் இதற்கும் தொடர்பு உண்டு என்று கருதுவோரும் உளர். ஆண்கள் தமது மார்பிலும் முதுகிலும் இவ்வாறு நிரந்தரமான வடிவங்களை வரைந்தனர். பெண்கள் தமது கைகளிலே கிளி, அன்னம், வாத்து முதலிய பறவைகளை வரைந்தனர். பச்சைகுத்தும் கலையிலே கைதேர்ந்த பெண்கள் தமது கலையை இளந்தலை முறையினருக்குச் சொல்லிக் கொடுத்தனர்.

மேலைப் புலக்கல்வியின் செல்வாக்கு இவற்றை "மூடநம்பிக்கை" என்று கருதும் கருத்தேற்றத்தை வழங்கியதால் இந்தக் கலையின் வளர்ச்சி தடைப்பட்டது.

## நூலாச்சியர் மரபு

இலங்கைத் தமிழர்களின் தனித்துவமான கல்விச் செயல்முறையினை எடுத்துக் காட்டும் நூலாச்சியர் மரபு யாழ்ப்பாணத்தின் மேற்குப் பிரதேசங்களிலே காணப்பட்டது. அராலி, பொன்னாலை, பண்ணாகம், தொல்புரம் முதலிய இடங்களில் நூலாச்சியர் இருந்தமைக்குச் செவிவழிச் சான்றுகள் உள்ளன.[14]

கிராமப்புறங்களில் அறிவறிந்த பெண்கள் "நூலாச்சியர்" எனப்பட்டனர். நூலாச்சியர் பொதுவாக மூன்று வகையினராகக் காணப்பட்டனர். அவர்களுள் ஒரு வகையினர் இலக்கியங்களையும் நீதி நூல்களையும், தேவார திருவாசகம் முதலியவற்றையும் நெட்டுருச் செய்து வைத்திருந்தனர். தம்மிடம் பாடம் கேட்கச் செல்வோருக்கு அவற்றை அவர்கள் மனப்பாடமாகச் சொல்லிக் கொடுத்தனர். கரவெட்டிக் கிராமத்தில் நூலாச்சியர் கிடுகு பின்னியவாறு தொல்காப்பியம் ஒப்பித்துக் கொண்டிருந்த காட்சியைப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நேரிலே கண்டு இன்புற்றார் என்ற தகவலும் உண்டு.[15]

வேறொரு வகை நூலாச்சியர் கைவினை வல்லாளராகக் காணப்பட்டனர். அவர்கள் பன்னவேலை, வன்னவேலை, திருகு வேலை, பாணிவேலை, சாயவேலை முதலியவற்றில் அறிவும் ஆற்றலும் உள்ளவர்களாக விளங்கினார்கள். இன்னொருவகை நூலாச்சியர், வாக்குச் சொல்வோராயும், காப்புக்கட்டுவோராயும் கிராமிய மருத்துவர்களாயும் மந்திரங்களில் ஈடுபடுவோராயும் இருந்தனர்.

## மரநிழற் பள்ளிகள்

கிராமங்களிற் சுற்றத்தவர்கள் சேர்ந்து வாழும் சமுக அலகு "அயல்" அல்லது "அயலட்டை" எனப்பட்டது. ஓர் அயலில் வாழும் சிறுமிகள் அந்த அயலில் வாழும் அறிவறிந்த பெண்ணிடம் அவரது வீட்டின் அருகே அல்லது பின் புறத்தேயுள்ள மர நிழலில் பாடங் கேட்பதும், படிப்பதும், இயங்கு தலும் மரநிழற் பள்ளிகளின் செயற்பாடுகளாயின. ஆண்பிள்ளைகளுக்குரிய கிராமியப் பள்ளிக்கூட ஒழுங்கமைப்பாக திண்ணைப் பள்ளிக்கூடங்கள் விளங்கின. அதற்குச் சமாந்தரமான சிறுமியர்க்குரிய பள்ளிக்கூட ஒழுங்கமைப்பாக மரநிழற் பள்ளிகள் அமைந்தன. திண்ணைப்பள்ளிக் கூடங்களிற் சிறுமியர் கற்றமைக்குச் சான்றாதாரங்கள் இல்லை.

மா, பலா, வேம்பு, ஆல், அரசு, புளி, நாவல் போன்ற பெருமரங்களின் கீழ் கற்றல் நிகழ்ந்தது. வரிவடிவங்களை மணலில் தமது சுண்டுவிரலால் மாணவிகள் எழுதினர். மணல் மீது எழுதிய எழுத்துக்களை "அழித்தல்" என்று அமங்கலமாகக் கூறும் மரபு காணப்படவில்லை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே தான் "அழி", "அழித்தல்", "அழிப்பர்" போன்ற எண்ணக்கருக்கள் அறிமுகமாயின. அழித்தல் என்பது "நிறைத்தல்", "அணைத்தல்" போன்ற சொற்களால் மங்கலமாக மரநிழற் பள்ளிகளிலே கூறப்பட்டது.

சிறுமியர் மணலிலே பூனைவீடு கட்டுதல், கைகளாலும் கால்களாலும் கோலமிடுதல், தாளமிட்டுக்கெந்துதல், மரத்தைச் சுற்றிவந்து கும்மியடித்தல் முதலிய உடலியக்கம் சார்ந்தகற்றல் தொழிற்பாடுகளும் நிகழ்ந்தன.

சில மரநிழற் பள்ளிகளில் ஊஞ்சல்கள் கட்டப்பட்டிருக்கும் ஆசிரியர் அமரும் ஊஞ்சல் "அன்ன ஊஞ்சல்" எனப்பட்டது. அவ்வூஞ்சலின் இருக்கை பலகையாற் செய்யப்பட்டிருக்கும். ஆசிரியைகளை "அன்னம்", "அன்னக்கா" என்று அழைக்கும் மரபும் நிலவியது. (அன்னம் நல்லவற்றை எடுத்து விட்டு அல்லவற்றைத் தவிர்த்து விடுதல் போன்று ஆசிரியரும் செயற்படுவார் என

நம்பப்பட்டது). மாணவர்கள் ஆடும் ஊஞ்சலின் இருக்கை காய்ந்த பனைமட்டையினால் ஆக்கப்பட்டது. கவிதைகளை ஊஞ்சலில் இருந்து ஆடியவாறு ஆசிரியையும் மாணவிகளும் பாடினர். ஊஞ்சலில் ஆடியவாறு கவிதை கற்றலும் பாடுதலும் மர நிழற்பள்ளிக்குரிய சிறப்புப்பண்பாகும். யாழ்ப்பாணத்து மரபு வழிப் பெண்கல்வியில் அசைவுகள் சிறப்பார்ந்த இடத்தைப் பெற்றிருந்தன. அசைவுகள் வாயிலாகக் கற்கும் "அசைவுக்கல்வி" (Movement Education) முறைமை பெண்கள் கல்வியில் ஒப்பீட்டளவில் மேலோங்கியிருந்தது.

இலங்கையின் கிராமிய வழிபாட்டு மரபில் வேம்பு, அரசு, ஆல், நாவல் முதலியவை மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருந்தமை வரலாற்று ஆய்வுகளிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.[16]

கணிதம் பெரும்பாலும் "மனக்கணிதம்" என்ற வகையில் கற்பிக்கப்பட்டது. பிரச்சனைகளுக்கு மனத்தாலே கணித்துத் தீர்வுகாணல் மனக்கணிதத்தில் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டது. "பெருக்கல் வாய்ப்பாடு" மனனம் செய்தலை பெண்களுக்கு இன்றியமையாத உளத்திறனாகக் கருதினர். பெருக்கல் வாய்ப்பாடு இருபது வரை வேகமாகச் சொல்வோருக்கு மணிமாலை பரிசாக வழங்கும் மரபும் காணப்பட்டது. அத்தகைய பெண்களே "கணக்கழகி", "கணியழகி" என்ற சிறப்புப் பெயர்களாலும் அழைத்தனர்.

பெண்கள் தாம் படித்த கல்வியையும், பெற்ற அனுபவங்களையும் தமது நினைவுப் பதிவுகளில் இருந்து மீட்டெடுத்தல் நாட்டார் பாடல்களிலே சுட்டிக்காட்டப்படும் சான்றுகளும் உள்ளன.17

"மாமரத்து உச்சியிலே
மாங்காய்ப் பழம் உறங்கும்
மாங்காய்ப் பழம் விழுந்தா
மறைந்த நினைவு வரும்"

"கொய்யா மரத்துமேலே
கொப்புப் பழம் உறங்கும்
கொப்புப் பழம் விழுந்தா
கோலம்மா நினைவு வரும்"

"வேம்பு பழுக்கையிலே - சிறுக்கி
வேலன் கதை படிப்போம்
நாவல் பழுக்கையிலே - சிறுக்கி
நல்ல பாடம் படிப்போம்
இலந்தை பழுக்கையிலே - சிறுக்கி
இராமர் கதை படிப்போம்"

முதலிய கிராமியப்பாடல் அடிகள் மரம் சார்ந்த கற்றல் பண்பாட்டை ஒருவகையிலே சுட்டிக் காட்டுகின்றன. பெண்களின் திருமணச் சடங்குகளில் "கன்னிக்கால்" நடுதல் - அதாவது பச்சை முள்முருக்க மரத்தை நட்டுத்தழைக்கச் செய்தல் இன்றும் யாழ்ப்பாணத்திற் காணக்கூடிய குறியீடாகவுள்ளது. பெண்களுக்கும் மரத்துக்குமுள்ள தொடர்பு அதனால் வலியுறுத்தப்படுகின்றது.

திருமணமாகிய பின்னர் பெண்களின் முறை சார்கல்விச் செயற்பாடுகள் நின்று விடுகின்றன. ஆயினும் கற்றல் தொடரல் வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. திருமணமாகிக் குழந்தைப் பேறுகிடைக்காத பெண்கள் தாம்படித்த மரநிழலுக்குச் சென்று அந்த மரத்தின் அடிப்பாகத்தை வலம் வந்து சுற்றி பிள்ளை வரம் கேட்டலும் வழக்கிலிருந்தன. அதாவது தாம் கற்ற பழையவற்றை மீட்டெடுக்கும் பொழுது அறிவின் மீள்பிறப்பாக்கமும், உயிரின் மீள்பிறப்பாக்கமும் நிலவும் என்று கருதப்பட்டது.

மரநிழற்பள்ளிகள் மிகவும் நெகிழ்ச்சி கொண்டதாயும் சந்தர்ப்பங்களுக்கேற்ப மாறும் இயல்பினதாயும், அமைந்த ஒழுங்கமைப்பாகும்.

## மருத்துவிச்சி மரபு

மரபுவழிப் பெண் கல்வியில் கை வைத்தியம் அல்லது மருத்துவிச்சி மரபு என்பதும் சிறப்பிடப் பெற்றிருந்தது. குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்படும் சிறுசிறுநோய்களைக் குணப்படுத்துவதற்கான கல்வி

பெண்களுக்கு வழங்கப்பட்டது. கிராமத்து முதாட்டிகளிடமிருந்தும் மருத்துவிச்சி என்று அழைக்கப்படும் மருத்துவமறிந்த பெண்களி டமிருந்தும் இளம் பெண்கள் அடிப்படையான நலவியற் கல்வியைப் பெற்றனர்.[18]

பெண்களுக்கான நோய்கள், பொது நோய்கள், சிறுவர்க்கான நோய்கள், மகப்பேறு, முதியோருக்கான நோய்கள், விஷக்கடி, உணவு, ஊட்டம் குடிநீர் தயாரிப்பு, எண்ணெய் காய்ச்சுதல் நோய் தணிக்கும் மந்திரங்கள் போன்ற பல்வேறு தறைகளில் அடிப்படை அறிவினையும் செயல் வழி அனுபவங்களையும் மருத்துவிச்சியர் வழங்கினர்.

இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களால் ஆனதென் றும், அவற்றை அடியொற்றி மருத்துவம் முப்பெரும் பிரிவுகளை உடைய அறிவியலாக முன்மொழியப்பட்டது. அவை வாதம், பித்தம், கபம் என மருத்துவிச்சியர் விளக்கினர். "வாதம்" அதிக வாயுவோடு மற்றைய பூதங்களைச் சிறிய அளவிலும் கொண்டுள்ளது. "பித்தம்" அதிக தீயுடன் குறைந்த அளவு ஏனைய பூதங்களையும் கொண்டுள்ளது. "கபம்" அதிக நீருடன் குறைந்த நிலையில் பிற பூதங்களையும் கொண்டுள்ளது என்றவாறு பஞ்ச பூதங்களோடு இணைந்த உறுப்பாக மனித உடலும் உடலியக்கங்களும் விளக்கப்பட்டன.

குடிநீர் தயாரித்தல் பெண்களுக்குரிய ஓர் அத்தியாவசியமான அறிவாகக் கருதப் பட்டது. சுரக்குடிநீர், வீக்கக்குடிநீர், விசசுரக் குடிநீர், வாதக்குடிநீர், இருமல் குடிநீர், சலரோகக்குடிநீர், கரப்பன் குடிநீர், கிருமிக் குடிநீர், சலக்கடுப்புக்குடிநீர், சுகபேதிக் குடிநீர், சளிக்காய்ச்சல் குடிநீர், தாகத்துக்குக் குடிநீர், வயிற்று வலிக் குடிநீர் முதலிய குடிநீர் வகைகள் எவ்வாறு தயாரிக்கப்படல் வேண்டும் என்ற அறிவு பெண்களுக்கு வழங்கப்பட்டது.

நாட்டார் வழக்கில் இடம் பெறும் மருத்துவிச்சி பாடலில் குடிநீர் தயாரிப்பதற் கான பொருள்கள் பல குறிப்பிடப்படுகின்றன. நெல்லுப் பொரி, மிளகு, வேர்க்கொம்பு, மஞ்சள், சீரகம், உள்ளி, மல்லி, பூடு, வெந்தயம் என்றவாறு குடிநீர்ப் பொருள்கள் குறிப்பிடப் படுகின்றன.

கச்சான் அடிக்க
காலிரண்டும் கிடுகிடுக்க,
மச்சாள் அறிவாளாம்
மாமன்சனி சுரத்தை

என்ற நாட்டார் பாடலில் நோயறியும் திறனுக்கும் பெண்களுக்குமுரிய தொடர்புகள் ஒரு வகையில் சுட்டிக்காட்டப் படுகின்றன.

நோய்கள் உடற் பிணிகள் என்றும் உளப்பிணிகள் என்றும் வகைப்படுத்தப்படும். இவ்விரு வகை நோய்கள் பற்றிய அடிப்படை அறிவும் அனுபவங்களும் பெண்களுக்குக் கிடைக்கப் பெற்றன. ஒத்துணர்வு சுகப் படுத்தல் (Empathy and Healing) என்ற இரு பரிமாணங்களும் பெண்களிடத்து நிலைபேறு கொண்டிருந்தன.

## விளக்கேற்றல் மரபு

கிராமப்புற வழிபாட்டு நிலையங்களில் "விளக்கு வைத்தல்" என்ற மரபு இன்றும் காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட நாளில் ஏற்றப்படும் விளக்கானது வேள்வி அல்லது வெளி மடை காணும் வரை அணையாது தொடர்ந்து சுடர் விட்ட வண்ணமிருக்கும். கிராமப் புறத்துப் பெண்கள் விளக்கேற்றிய நாள் தொடக்கம் இறைசிந்தனையோடும், புராணங்கள் ஓதுதலோடும் ஈடுபட்டிருப்பர்.

விளக்கு வைத்தல் என்பது கல்வியைத் தொடர்வதற்குக் குறியீடாகக் கருதப்பட்டது. பெண் தெய்வவழிபாட்டோடு விளக்குவைத்தல் நிகழ்ச்சி கூடிய தொடர்புகளைக் கொண்டிருந்தது. கண்ணகி, அருந்ததி, சீதை, காரைக்காலம்மை, வாசுகி, ஔவை முதலாம்

பெண்களின் கதைகள் பேசப்படும் பொழுது, பெண்ணின் வீரஇயல்புகளை முதன்மைப் படுத்தல் சிறப்பிடம் பெறும் காளிவாளேந்தி வந்து துன்பம் தீர்த்தலும், மாரி படையோடு வந்து பாதகம் போக்கலும், அம்மன் அரிமாவோடு வந்து தீமை துரத்தலும் என்றவாறு ஒருவித வீர உணர்ச்சியும், வன் நடத்தைக் கோலங்களும் விரவிய அறிகை மேம்பாடு கொண்டிருக்கும்.

அம்மன் அருகே வாள், வேல், ஈட்டி முதலிய கவசங்களை வைத்து வழிபடும் மரபு இன்றும் காணப்படுகிறது. இந்தக் கல்விச் செயற்பாடு பெண்களுக்கு வீர உணர்வுதரும் வழிபாட்டு முறையாக அமைந்தது. உடல் உறுதி, மனவுறுதி, செயலுறுதி மூன்றும் விளக்கேற்றல் மரபோடு இணைந்திருந்தது.[19]

## அகமேய்ப்பு மரபு

மந்தைமேய்ப்பு அகமேய்ப்பு புறமேய்ப்பு எனப்பாகுபடுத்தப்பட்டது. ஆடு, மாடு, பசு முதலியவற்றை மேய்ச்சல் தரைகளுக்கு சாய்த்துச் சென்று மேய்க்கும் பணி ஆண்களுக்கு விடப்பட்டது. வீட்டு வளவுக்குள் வந்ததும் அவற்றைப் பராமரிக்கும் பணியும், பால் கறக்கும் பணியும் பெண்களிடம் விடப்பட்ன. பால் காய்ச்சுதல், பரிமாறுதல், தயிர், மோர், நெய் செய்தல் என்ற அனைத்துப் பணிகளும் பெண்களுக்குரியனவாகக் கருதப்பட்டன. பாலம்மா, பாலக்கா, பாலாய்ச்சி போன்ற பெண்பாற் பெயர்களும் வழக்கில் இருந்தன.

தாமாக மேய்ச்சல் தரைகளுக்குச் சென்று மேய்ந்து வரும் கால் நடைகள் "கட்டாக் காலிகள்" எனப்பட்டன. கட்டாக் காலிகளும் வீட்டுக்கு வந்ததும் அவற்றைப் பராமரிக்கம் பணி பெண்களுக்கே விடப் பட்டன. சில கிராமங்களில் பசுக்களில் ஆண்கள் பால் கறத்தல் ஒரு குழுமத்தடையாக (Taboo) இருந்ததென்றும் சொல்லப்படுகின்றது. பசு, மறி முதலியவற்றை இறைச்சிக்காகக் கொல்வதும் குழுமத்தடையாக இருந்தது.

ஆடுவளர்ப்பு, மாடு வளர்ப்பு முதலியவை தொடர்பான நடைமுறை அறிவு மூத்த பெண்கள் வழியாக இளைய பெண்களுக்கு வழங்கப்பட்டன. ஆட்டுக்குட்டி, பசுக்கன்று முதலியவற்றை முதலில் பெண்களே தமது கைகளால் தூக்க வேண்டுமென்று வலியுறுத் தப்பட்டது.

பால் பெருக வேண்டுமெனில் பெண் கள் பாடிக் கறத்தல் வேண்டுமென்றும் கற்பிக்கப்பட்டது.[20]

ஆலமரத்திலை பாலிருக்கு
அத்திமரத்திலை பூவிருக்கு
பனைமரத்திலை பாலிருக்கு
பட்டிமரத்திலை பூவிருக்கு
பிலாமரத்திலை பாலிருக்கு
புளியமரத்திலை பூவிருக்கு

இவ்வாறு பால் மரங்களையும் பூ மரங்களையும் ஒப்பிட்டுப் பாடும் மரபு காணப் பட்டது. "முதலில் கறந்த பால் முன்னுள்ள தெய்வத்துக்கே" என்பது பழமொழி அதாவது வீட்டுக்குக் கிட்டவுள்ள கடவுளருக்கு அதனைக் காணிக்கையாகக் கொடுப்பர்.[21]

பால் கறவடி ஆத்தா
பட்டிகிடக்குது சும்மா
பால் கறவடி ஆத்தா
பிள்ளை கிடக்குது சும்மா

வீடு என்ற அமைப்பினுள் பெண்கள் ஆண்களிலும் கூடுதலான உடலுழைப்பை வழங்கி வந்தார்கள். இந்நிலையில் வீடுசார்ந்த அனுபவக் கல்வியில் ஆண்களிலும் பெண் களே ஒப்பீட்டளவில் மேலோங்கியிருந்தனர். ஆயினும் அதிகாரி நிலையில் ஆண்கள் மேலோங்கியிருந்தமை ஒரு முரணுரையாக வுள்ளது.

திருமணமாகும் பொழுது பெண்ணுக் குப் பாதுகாவலாக அவள் வளர்த்த கால் நடைகளைக் கொடுக்கும் மரபும் காணப் பட்டது. "பெண்ணுக்குக் காவல் பால் மாடு, பொருளுக்குக் காவல் கோர்க்காலி" என்ற தொடரும் வழக்கிலிருந்தது.

## தானியக்காவல் மரபு

விளைந்து வந்த தானியங்களை வீட்டிலே பாதுகாத்தலும் இடித்தலும், புடைத்தலும், பதனிடலும் பெண்களின் பொறுப்பில் விடப்பட்டன. பெண்களின் பெயர்கள் தானியங்களுடன் இணைத்தும் அமைக்கப்பட்டன. தானியலட்சுமி, பயிற்றங் கன்னி, அன்னலட்சுமி, அன்னபூரணி, நெற் கன்னி, கடலைஆச்சி, தினையக்கை முதலிய பெயர்கள் குறிப்பிடத்தக்கவை.

தானியங்கள் அடுக்கி வைக்கும் மேடை கோர்க்காலி எனப்பட்டது. கோர்க்காலியிலு ள்ள தானியங்களை அளந்து கணக்கிடும் குவளை "கொத்து" எனப்பட்டது. பெண்களின் பூப்புச் சடங்கில் அவர்களது கைகளில் கொத்தும் அது நிறைந்த நெல்லும் வழங்கும் குறியீடு இன்றும் நிலவி வருகின்றது. அதாவது தானியத்துக்குப் பெண்ணே காவல் என்ற அறிவுறுத்தல் அதனாற் குறிப்பிடப்படும்.

தானியங்களுக்குக் காவலாயிருக்கும் பெண் அனைவரையும் தாபரிக்கும் பொறுப்பையும், அதற்குப் பொருத்தமான அனுபவங்களையும் பெற வேண்டியிருந்தது. இதனை அச்சுவேலி தம்பிமுத்துப் புலவரின் (1857 – 1937) கவிதை ஒன்று குறிப்பிடுகின்றது. [22]

"பசித்தவர் சலித்தவர் தமைத் தாபரிப்பவள்
பரிவுடைய மொழி பகர்பவள்"

என்றவாறு பெண்கள் அறிந்திருக்க வேண்டிய கடமைகளைத் தம்பிமுத்துப் புலவர் குறிப்பிடுகின்றார்.

வசதிமிக்க குடும்பங்களிலே பெண்கள் எழுதிப் பழகுவதற்குத் தானியக் குவியல்க ளைப் பயன்படுத்தினார்கள் என்றும் அறியப் படுகின்றது. அதாவது, தாம்பாளத்திலே தானியத்தைப் பரவி தமிழ் நெடுங் கணக்கை யும், சொற்களையும் எழுதிப் பழகினார்கள் பெண்கள் எழுதிப் பழகும் பொழுது "எழுத ம்மா அழகம்மா" என்று பாடி வாழ்த்தும் மரபு காணப்பட்டது.

தானியங்களை இடிக்கும் பொழுதும், அரைக்கும் பொழுதும் புடைக்கும் பொழுதும் பெண்கள் பாடிய பாடல்கள், இளைய பெண் தலைமுறையினருக்கு உரிய முறையிலே கையளிக்கப்படாமையால் அவற்றை இன்று பெறுதல் கடினமாகவுள்ளது. பிரித்தானியர் ஆட்சியின் போது ஒழுங்கமைக்கப்பட்ட நவீன கல்விச் செயற்பாடுகள் பெண்களின் வாய் மொழிக் கல்விப் பாரம்பரியத்தைக் கலைத் திட்டத்தின் வழியாகப் பாதுகாப்பதற்குரிய அமைப்புக்களைக் கொண்டு இருக்கவில்லை.

பெண்களின் மனங்களிலே கருத் தேற்றம் செய்யப்பெற்ற "மேலைத்தேய மயமாக்கல்" என்ற விசையானது வாய்மொழி மரபுகளை ஒருவகையிலே தாழ்ந்தவை என்ற உணர்வையும் ஏற்படுத்தியது.

## விளையாட்டுக் கல்வி

தொழில் செய்யும் பொழுது உடற் களைப்பு நீங்க விளையாட்டுப் பண்புகளை உட்புகுத்துதல் பெண்களிடத்துக் காணப் பட்டது. ஆடியவாறு நீரள்ளுதல், அன்ன நடை நடந்து நீர்க்குடத்தைத் தூக்கி வருதல், பாடியவாறு மாவிடித்தல், தாளத்தோடு உலக்கை போடுதல் என்றவாறு விளையாட் டையும் உற்பத்திப் பெருக்கத்தையும் ஒன்றிணைக்கும் கல்விச் செயற்பாடுகள் பெண்களிடத்துக் காணப்பட்டன. அதாவது விளையாட்டுக்குரிய திறனுக்கும் (Skili) உற்பத்திக்குரிய திறனுக்குமிடையே ஒப்புமை கள் கண்டறியப்பட்டன.

உடலியக்கங்களோடு மனவெழுச்சி களை ஒன்றிணைக்கும் கல்விச் செயற்பாடு களும் இடம் பெற்றன. தொழில் புரியும் பொழுது சொல் சார்ந்த முறையிலே மன வெழுச்சிகளைத் தூண்டும் செயற்பாட்டுக்கு ஓர் எடுத்துக் காட்டு வருமாறு.[23]

"வாழைக்காய் – வெண்டிக்காய் –
வறுத்தெடுக்கச் சுண்டக்காய்"

வறுவல் செய்யும் பொழுது காய்கறிகள் சுருங்கிச் சிறிதாதல் நகைச் சுவைபட மேற்கூறிய பாடலிலே சுட்டிக்காட்டப்பட்டது.

விளையாட்டுக் கல்வியின் இன்னொரு பண்பு தசை நார்களுக்குப் பயிற்சி தருதலாகும்.

"கெந்தியடி பெண்ணே கெந்தியடி
கால்கள் கடுத்திடக் கெந்தியடி"

என்று சொல்லியவாறு பெண்கள் கெந்தியடித்துத் தசை நார்களுக்கும் முட்டுக் களுக்கும் பயிற்சி தந்தனர். "பெண்ணுக்குக் காலும் ஆணுக்குத் தோளும்" என்ற தொடரிலிருந்து பெண்கள் கால் முட்டுக்குக் கூடுதலான பயிற்சிகளையும், ஆண்கள் தோள் முட்டுக்களுக்குக் கூடுதலான பயிற்சியையும் வழங்கினர்.

பல்லாங்குழி, சொக்கான் வேட்டல், தாயம், கண்பொத்தி விளையாட்டு போன்ற சிறிய அசைவுகளைக் கொண்ட விளையாட்டுக் கள் பெண்களிடத்தும் கிட்டி, தாச்சி போன்ற கடின அசைவுகளைக் கொண்ட விளையாட்டு க்கள் ஆண்களிடத்தும் காணப்பட்டன.

பெண்களின் விளையாட்டுக்களில் சொல்லாடலும் விரவியிருந்தது. உதாரணத் துக்குப் பின்வரும் கண்பொத்தி விளையாட்டு அடிகளைக் குறிப்பிடலாம்.

"எவடம்? எவடம்?
புளியடி புளியடி
எவடம்? எவடம்?
பெண்ணடி பெண்ணடி"

மறைபொருள்களைக் கண்டுபிடித்த லும், பெண்களின் விளையாட்டுக் கல்வித் தனித்துவமாகும். மணலிலும், தானியங்களி லும் பொருளைப் புதைத்து வைக்கும் விளையாட்டு "தம்பலம்" எனப்பட்டது. ஒருவருக்குரிய சுயபலத்தை (தன்பலத்தை) கண்டறியும் விளையாட்டாக இது அமைந்தது.

"கீச்சுமாச்சுத் தம்பலம்
கீயா மாயாத் தம்பலம்
மாச்சு மாச்சுத் தம்பலம்
மாயா மாயத் தம்பலம்"

என்று சொல்லி பெண் ஒருத்தி பொருளைப் புதைத்தலும்.

"எடடி பெண்ணே எடடி
எடுத்தகைக்குப் பரிசு"

என்று சவால் விடுதலும் இந்த விளையாட்டின் சிறப்புப் பண்புகளாகும். உசாவல் விருப்பும், கண்டுபிடிக்கும் திறனும் இந்த விளையாட்டின் வழியாக முன்னெடுக் கப்பட்டன.

பெண்களின் உளநலத்தை வளர்த் தெடுக்கவும், அவர்களுக்குச் சீர்மியம் (Counselling) வழங்கவும் வல்ல கதைகள் பெண் கல்வியில் இடம் பெற்றிருந்தன. ஒரு கதையை வளர்த்து அதன் முடிவைச் சொல்லும்படி கேட்டலும், ஒரு பிரச்சினையான சட்டத்தில் கதையை நிறுத்தி மிகுதியைக் கற்பனை செய்யும்படி கூறுதலுமான உளநெறிக்கதைகள் (Psychomonitoring Stories) பெண்கள் மத்தியிலே நிலைபேறு கொண்டிருந்தன.

## விழுமியக்கல்வி

சமூக அடிக்கட்டுமானத்தை (Base) கட்டிக்காக்கும் வகையில் விழுமியங்களும், அறவொழுக்கங்களும் முத்தோரிடமிருந்தும் கையளிக்கப்பட்டு வந்தன. முடிய பொருளாதாரக் கட்டமைப்பிலே ஐரோப்பியர் கிராமங்களுக்குள் நுழையும்வரை பாரிய சிந்தனை மாற்றங்கள் நிகழவில்லை. இன்சொல் பேசல், இசைவுபட வாழ்தல், முத்தோரை மதித்தல், வாய்மை, பகுத்துண்டு வாழ்தல், அன்புடமை, சாதிய ஒழுக்கங்கள் என்று வரைறுக்கப்பட்டவற்றை வழுவாது கடைப்பிடித்தல், எதிர்மொழி கூறாமை, வன்னடத்தைகளைக் கட்டுப்படுத்தல், பாலியல் சார்ந்த ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல்

முதலியவற்றை சொல்லாலும் செயலாலும் முத்தோர் வலியுறுத்தினர்.

"ஆசாரமறிந்த அருங்குலப்பெண்" என்ற தொடர் வழக்கிலிருந்தது.[24] பெண்களின் ஒழுக்கங்களை வலியுறுத்தும் பாடல்களும் காணப்படுகின்றன. அறம், ஒழுக்கம் முதலியவற்றை வற்புறுத்தல் பெண்கள் மீதே மிகக் கூடுதலாக பிரயோகிக்கப்பட்டுள்ளது போன்று தெரிகின்றது.

பாரம்பரியமான ஒழுக்கக்கல்வியிற் பல சிறப்பியல்புகள் காணப்பட்டன. அவை:

1. ஒழுக்கத்தை வலியுறுத்துபவர் தாம் வாழ்ந்து காட்ட வேண்டியிருந்தது.
2. சிறுமிகள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியவற்றை மனனம் செய்யும் வண்ணம் வற்புறுத்தப்பட்டனர்.
3. வளர்ந்த பெண்கள் நீதிவெண்பாக்களை மனனம் செய்ய வேண்டியிருந்தது.

இவ்வாறான பெண்களின் முதிர்ச்சிக் கேற்றவாறு ஒழுக்க நூல்களைக் கற்றல் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

4. பெண்களின் ஒழுக்க வாழ்வுக்கு முன்னுதாரணமாகவும், காவற் பெண்ணாகவும் "ஔவை" என்ற குறியீடு சுட்டிக் காட்டப்பட்டது. அதாவது ஒழுக்கங்களை புறக்கணிக்கும் பெண்கள் ஔவை என்ற புனிதமான பெண்ணுக்கே முறையீடு செய்யப்பட்டார்கள். "ஔவையே காணாய்", "ஔவையே கேளாய்", "ஔவையே சொல்வாய்" என்றவாறான முறையீடுகள் பெண்கள் மத்தியிலே நிலவின.

   (ஆத்திசூடியை ஔவையார் எழுதியமையால் இந்தத் தோற்றப்பாடு தோன்றியிருக்கலாம்)

5. கூடாவொழுக்கங்களைக் கைவிடல் வேண்டும் என்பதைக் காட்டும் குறியீடுகள் பெண்களுக்குரிய சடங்குகளில் இடம்பெற்றன. உதாரணமாகப் பெண்களின் பூப்புச்சடங்கில் "குப்பைத்தண்ணீர் வார்த்தல்" என்பது கூடாவொழுக்கங்கள் இருப்பின் அவற்றைக் கழுவிக்கை விட்டு விடவேண்டுமெனக் குறிக்கப்பட்டது.

## கல்விசார் அடைவுகளின் மதிப்பீடு

மதிப்பீடுகள் முதியோராலும், முத்தோராலும், சமயவதினராலும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவை நியமமான மதிப்பீடுகளாகவோ, ஆவணப்படுத்தலாகவோ அமையவில்லை. மதிப்பீடுகள் இரண்டு வகையாக இடம்பெற்றன. அவை:

(1) வாழ்க்கை மட்டத்தில் இடம்பெற்ற மதிப்பீடுகள் :

பெண்கள் பூப்பு, எய்தும்பொழுதும், திருமணமாகும் பொழுதும், பிள்ளைகளையும், உறவினர்களையும், விருந்தினர்களையும் பராமரிக்கும் பொழுது அவர்களது அறிவு, திறன், மனப்பாங்கு முதலிய பரிமாணங்கள் மதிப்பீடு செய்யப்படுதல் உண்டு. மதிப்பீட்டில் உயர்நிலையை அடையும் பெண்கள், சீமாட்டி, சீதேவி, சரசுவதி, தருமி, மாகலட்சுமி, ராசாத்தி என்ற அடைமொழிகளைப் பெற்றனர்.[25]

(2) சமூக நியமங்களில் இருந்து ஒருவர் விலகும்போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் :

பெண்கள் சமூக நியமங்களில் இருந்தும் எதிர்பார்ப்புக்களில் இருந்தும் விலகிச் செல்லும்பொழுது அவர்களின் திறன்கள் மதிப்பீடு செய்யப்படுதல் உண்டு. இவ்வகை மதிப்பீடுகள் அதிக அகவயப் பாங்கானதாகவும் மனவெழுச்சிகள் கலந்தனவாகவும் அமைந்தன.

முத்தோராலும் முதியோராலும் மேற் கொள்ளப்பட்ட மதிப்பீடுகளை விட சம

வயதினர், சகபாடிகள் முதலியோரால் அவ்வப்போது பெண்களின் திறன்களும், சாதுரியங்களும், சமயோசித புத்திகளும் மதிப்பீடு செய்யப்பட்டு உடனுக்குடன் பாராட்டுகளும், வெகுமதிகளும் வழங்கப் பட்டன. இதமாகப் பேசும் சொற்களஞ்சிய மேம்பாட்டினைக் கொண்ட பெண்களுக்கு கற்கண்டு, தேன், கரும்பு, பனங்கட்டி முதலிய அடைமொழிகள் வழங்கப்பட்டன.

வீட்டிலுள்ள பாத்திரங்களைப் பார்த்துப்பெண்ணின் ஆற்றல்களை மதிப்பீடு செய்தல், முற்றத்தின் அழகைப் பார்த்து பெண்ணின் செயற்றிறன்களை மதிப்பிடுதல், மெழுக்கைப் பார்த்து கைவண்ணத்தை மதிப்பி டுதல், சமைக்கும் சமையலைச் சுவைத்து ஆற்றல்களை மதிப்பிடுல் என்றவாறு பெண் களின் உடலியக்கத்திறன்கள் கண்டறியப் பட்டன.

"பானையைப் பாத்துப் பெண்ணைச் சொல்லலாம்"
"அகப்பையைப் பாத்து அடுப்படியைச் சொல்லலாம்"
"முத்தத்தைப் பாத்து முத்தம்மாவை அறியலாம்"
"மெழுக்கைப் பாத்து மச்சாளை அறியலாம்"

போன்ற பல கிராமியத் தொடர்கள் வழக்கிலிருந்தன.

## தொகுப்பு

(அ) தொகுத்து நோக்கும் பொழுது தொழிற் பிரிவுக்கேற்ப ஆண்களுக்கு ஒருவிதமான கல்விச் செயற்பாடும், பெண்களுக்க வேறொருவிதமான கல்விச் செயற் பாடும் அமைக்கப்பட்டு இருந்தது.

(ஆ) பெண்களுக்குரிய கல்விக் கையளிப்பும், சாதியத்துக்கேற்ற வேறுபாடுகளைக் கொண்டிருந்தது.

(இ) குடும்பம் என்ற சமூக அலகைப் பாது காத்தல், பராமரித்தல் தொடர்பான அனுபவக்கல்வி ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கே கூடுதலாக ஒழுங்கமைக் கப்பட்டிருந்தது.

(ஈ) பெண்களுக்குரிய பொதுவான கல்வி ஏற்பாடுகள் "புலத்தில் தங்கியிருக்காமை" என்ற பண்புக்கு உற்சாகம் வழங்கின.

(உ) சமூக முரண்பாடுகளின் வழி பெண் களின் சுயபடிமம் (Self Image) வளர்க்கப் படுவதற்கு ஆதரவும் ஆதரவின்மையும் ஏக காலத்திலே காணப்பெற்றன.

(ஊ) பெண்களின் ஆளுமையை வளர்க்கக் கூடிய பரவலானதும் அகல்விரி பண்பு கொண்டதுமான செயற்பாடுகளை யாழ்ப்பாணத்து மரபுவழிப் பெண் கல்வி ஒழுங்கமைப்புக் கொண்டிருந்தது.

தமிழ்ப்பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களை விளங்கிக் கொள்வதற்கும், "ஆசியமுறைமை" (Asiatic Mode) என்று குறிப்பிடப்படும் எண்ணக்கருவை, மரபுவழிக் கல்விச் செயற்பாடுகளோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கும், இவ்வகையான மேலும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

### அடிக்குறிப்புகள்

1. Susan S. Wadley (ed.) ***The Powers of Tamil Women***, Syracuse University, 1980, p. 25.
2. Keneth David, "Cultural and Socio - economicAccounts of Jaffna Women" ***Ibid.***, p. 93.
3. ஆ. சதாசிவம் (தொ. ஆ.), ***ஈழத்துக்கவிதைக் களஞ்சியம்,*** சாகித்திய மண்டலம், கொழும்பு, 1966, ப. 107.
4. எஸ் நடராசா, செவ்வி, இணு வில். 29. 02. 96,
5. A.W. Oak, ***Status of women in Education.*** The Indian Publications, Ambala Cantt, 1988, p.22.
6. Serenda Nanda, ***Cultural Anthropology***, D. Van Nostrand Company, London, 1980, p. 36.
7. ச. கந்தசுவாமி, செவ்வி. இணுவில், 03. 03. 96.
8. மேலது.
9. மேலது.
10. மு. ஆபிரகாம் பண்டிதர், ***கர்ணாமிர்தசாகரம்,*** கருணாநிதி வைத்தியசாலை, தஞ்சாவூர், 1917, ப. 43.
11. மேலது, ப. 49.
12. எஸ். நடராசா, முற்சுட்டியமை.
13. களஆய்வு, இணு வில் தெற்கு, 04. 03. 96.
14. தா. அமிர்தலிங்கம், ***இணுவில் கிராமத்தின் கல்வி மரபு,*** அணிந்துரை, இணு வில், 1998.
15. எஸ். சிவலிங்கராசா, செவ்வி, யாழ் பல்கலைக்கழகம், 03. 08. 97.
16. சி. க. சிற்றம்பலம், ***யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு,*** யாழ் பல்கலைக்கழக வெளியீடு, 1993, ப. 567.
17. க. கந்தசுவாமி, முற்சுட்டியமை.
18. எஸ். பரமசாமி, செவ்வி. இணுவில் 4. 3. 96.
19. மேலது.
20. ச. கந்தசுவாமி, முற்சுட்டியமை.
21. மேலது.
22. அ. சதாசிவம் (தொ. ஆ.) முற்சுட்டியமை, ப. 362.
23. க. கந்தசுவாமி, முற்சுட்டிமை.
24. எஸ். பரமசாமி, முற்சுட்டியமை.
25. மேலது.